# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, ත්‍රිකුණාමලය
# மாவட்டச் செயலகம், திருகோணமலை

# District Secretariat, Kachcheri, Trincomalee

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳව කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතනභාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றத்தின் அரச கணக்குக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பான நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Submission of the observations of Hon. Minister in charge of the institution and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

பாராளுமன்ற வெளியீடு தொடர் – ௪௧௨
மாவட்ட செயலகம் – திருகோணமலை

பகுதி I

| | அறிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | நிறுவனத்தின் குறைபாடுகளை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | அதிகாரமற்ற அத்துமீறல் தொடர்பான பதிவேடு கால அடிப்டையில் பராமரிக்கப்படவில்லை. | தற்போது மாவட்ட செயலகத்தில் கால அடிப்டையில் தகவல்கள் இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகின்றது. |
| 02 | நீண்டகால அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான பதிவேடு கால அடிப்டையில் பராமரிக்கப்படவில்லை. | தற்போது மாவட்ட செயலகத்தில் கால அடிப்படையில் தகவல்கள் உள்ளடங்கிய நீண்டகால அனுமதிப்பத்திர ங்கள் பதிவேடுகள் இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகின்றது. |
| 03 | ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு கால அடிப்டையில் பராமரிக்கப்படவில்லை. | ஒவ்வொரு வருடமும் ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு விபரங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பவைக்கப்பட்டு வருவதுடன் அப்பதிவேடுகள் தொடர்ந்து இற்றைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| 04 | அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை. | அனைத்து வாகனங்களினதும் உரிமைகள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 05 | ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒதுக்க வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக்குறிப்புக் களும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் தற்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 06 | ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | சம்பந்தப்பட்ட வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதால், அந்த வாகனத்தை மாவட்டச் செயலாளரின் பெயரில் உரிமை மாற்றம் செய்வதற்காக ஆரம்ப கட்ட நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன். மாவட்டச் செயலாளரின் பெயரிற்கு உரிமை மாற்றம் செய்யப்ப ட்டவுடன் அகற்றல் செயல்முறையை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| 07 | வாகனம் ஒவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை. | அனைத்து வாகனங்களுக்கும் சம்பவ பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. |
| 08 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இதுவரை இடம்பெற்ற அனைத்து அரச வாகன விபத்துகள் தொடர்பான விசாரனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், நி.ஒ இன்படி தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| 09 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை. | நிலுவைக்கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன . |
| பகுதி II | | |
| 10 | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மாதந்தோறும் இடம்பெறவில்லை. | குறிப்பிட்ட காலப்பகுதியில் நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக மாதாந்த மாவட்ட ருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த முடியாமல் போன போதிலும், 03 மாதங்களுக்கு ஒரு முறையாவது எடுக்கப்பட்டது.மேலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கௌரவத் தலைவர் கூட்டங்களுக்கான திகதிகளை ஒதுக்கும் போது, பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களைத் தவிர்த்து ஏனைய நாட்களில் வழங்கும்போது,சில சந்தர்ப்பங்க ளில் அந்த மாதத்தில் கூட்டத்தை நடத்த முடியாமல் போயுள்ளது. |
| 11 | மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டங்கள் மாதந்தோறும் நடைபெறவில்லை. | மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டங்கள் வருடத்திற் இரு தடவைகள் நடத்துவதற் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன . |
| 12 | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நி லைபெறுதக நோக்கங்ளை இனங்கண்டிருக்கவில்லை. | திருகோணமலை மாவட்டத்திற்கான 2023 ஆம் ஆண்டுக்குரிய நிலையான அபிவிருத்தித் திட்டமும் இலக்குகளும் நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், 2024ம் ஆண்டுக்கான திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 13 | அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரிய முறையில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்ககள் ஆரம்பிக்கப்படவில்லை. | இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்மைய, நிலையான அபிவிருத்தி இலக்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. |
| 14 | அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குதளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்படுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | கண்காணிப்புநோக்கங்களுக்காகசெயல்திறன் குறிகாட்டிகள் ரையறுக்கப்பட்டுள்ளன,மேலும் அந்த குறிகாட்டிகளின் அடிப்டையில் முன்னேற்றம் அளவிடப்பட்டுள்ளது. |
| 15 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது. | திட்டமிடப்பட்ட பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள ன.கணக்காய்வாளர்.தலைமை அதிபதியினால் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் அனைத்து குறைப்பாடுகளும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. |
| 16 | இனங்கண்ட செயற்சுட்டியின் அடைவு 24% விட குறைந்த மட்டத்தில் நிலவியது. | தற்போது செயல்திறன் குறியீடு தேவையான அளவை எட்டியுள்ளது.(2024 ஆம் ஆண்டு 80%) |
| 17 | மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு கூட்டங்கள் காலாண்டில் ஒரு முறை கூட நடத்தப்படவில்லை. | 2026ம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான போதைபொருள் தடுப்பு குழுக்கூட்டம் பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| 18 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | ஒதுக்கீடுகளுக்கு அமைய சகல பயிற்சி நெறிகளும் தற்போது வழங்கப்பட்டுள்ளன. |

.........................................................

டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை.

டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார
அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட செயலாளர்
திருகோணமலை

.........................................................

ப.ஜெயபாஸ்கர்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை.

ப.ஜெயபாஸ்கர்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.